[1982 ஏப்ரல் 5

ஆறுமுகநேரி, காயல்பட்டினம் பேரூராட்சிகளுக்கான குடிநீர்த் திட்டங்கள்.

* வினா எண் 757— திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் தொழிலாளர்கள் நிறைந்துள்ள ஆறுமுகநேரி, காயல்பட்டினம் பேரூராட்சிகளின் குடிநீர்த் திட்ட விஸ்தரிப்புக்கான திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இத்திட்டத்திற்காக அரசு செலவிட எண்ணியுள்ள தொகை எவ்வளவு?

(இ) இதனால் பலன் அடையும் கிராமங்கள் எத்தனை? மக்கள் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: (அ) மற்றும் (ஆ): ஆம். ஆறுமுகநேரி பேரூராட்சிக்கு ரூ. 6.19 இலட்சமும், காயல்பட்டினம் பேரூராட்சிக்கு ரூ. 7.96 இலட்சமும் செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(இ) பயனடையும் மக்கள் ஏறக்குறைய 10,000 பேர்கள்.

திருச்சி தாலுகாவை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்.

* வினா எண் 758— திரு எம். சின்னசாமி: திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் திருச்சி தாலுகாவை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: ஆம்.

(முற்பகல் 9.20)

திரு. எம். சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திருச்சி தாலுகாவை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி பிரிக்கப்படவிருக்கும் அந்தத் தாலுகாவுக்கு என்ன பெயர் வைக்கப்படும்? எந்தெந்த பிர்க்காக்கள் இந்த புதிய தாலுகாவில் சேர்க்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, எந்தெந்த பிர்க்காக்கள் இந்தப் புதிய தாலுகாவில் சேர்க்கப்படும் என்ற தகவல் இல்லை. தகவல் இல்லை என்றாலும் திருச்சி வட்டம் இரண்டு பிரிவுகளாகப் பிரித்து அமைக்கப்படும். அப்போது திருச்சி ஒரு வட்டமாகவும், திருவரங்கம் ஒரு வட்டமாகவும் அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.